**பெருந்தலைவர் காமராசர் வேளாண் அறிவியல் நிலையம்**
**குரும்பாப்பட்டு, புதுச்சேரி - 605 009**
**தொலைபேசி - 0413 - 2271292**

**எண்:** 03/PKKVK/WB/Auction/20120-21 **நாள்: 18.05.2020**

## ஏல அறிவிப்பு

வேளாண் அறிவியல் நிலையத்திற்கு சொந்தமான வாழை மரங்களின் மகசூல் குத்தகைக்கான ஏலம் விடப்பட உள்ளன.

| பகுதி | மரங்களின் வகைகள் | குத்தகைக் காலம் | மரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| I | வாழை மரங்கள் | 06.06.2020ல் இருந்து 06.12.2020 முடிய | 1344 |

- ஒப்பந்த விண்ணப்பப் படிவங்களை ரூ.100/- + 5% GST செலுத்தி அலுவலக நாட்களில், குரும்பாபட் பெருந்தலைவர் காமராசர் வேளாண் அறிவியல் நிலையத்தில் உள்ள முதல்வர் அலுவலகத்தில் 05.06.2020 பகல் 12.00 மணி வரை பெறலாம்.

- பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 05.06.2020 மாலை 2.00 மணிவரை.

- 05.06.2020 அன்று மாலை 3.00 மணி அளவில் ஏலம் நடைபெறும்.

(முனைவர். அ.இராமமூர்த்தி)
திட்ட ஒருங்கிணைப்பாளர்

**பெருந்தலைவர் காமராசர் வேளாண்மை அறிவியல் நிலையம்**
**குரும்பாப்பட்டு. புதுவை-9**

**டெண்டர் விண்ணப்ப படிவம்**

1. ஏலம் கேட்பவரின் பெயர் மற்றும் முழு முகவரி :
2. ஏலத்தொகை (ரூபாய்) :
3. கேட்புக் காசோலையின் விபரம் :
   (வங்கி மற்றும் தேதி)

நான் பெருந்தலைவர் காமராசர் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் நிர்வாகத்தால் விதிக்கப்பட்டுள்ள அனைத்து ஏல நிபந்தனைகளுக்கும் முழுமனதுடன் கட்டுப்பட்டு மேற்கூறிய தொகைக்கு ஏலம் எடுக்க சம்மதிக்கிறேன்.

ஏலம் கேட்பவரின் கையொப்பம்

இடம்:

நாள்:

## ஏல நிபந்தனைகள்

1. ஏல அறிவிப்பில் கண்டபடி மேற்கு பண்ணையின் 'O' பகுதியில் உள்ள 1344 வாழை மரங்களின் மகசூல் குத்தகைக்காக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தங்கள் 05.06.2020 அன்று மாலை 2.00 மணிக்குள் முதல்வர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

2. EMD தொகையை ஏதாவது ஒரு தேசிய வங்கியில் கேட்ப்புக் காசோலையாக எடுத்து விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். ஏலம் எடுக்காத நபர்களுக்கு ஏல இறுதியில் அவர்களுடைய EMD திருப்பித்தரப்படும்.

| மரங்களின் வகைகள் | குத்தகைக் காலம் | மரங்களின் எண்ணிக்கை | EMD தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| 'O' பகுதியில் உள்ள வாழை மரங்கள் | 06.06.2020 ல் இருந்து 06.12.2020 முடிய | 1344 | 10,000/- |

3. ஒப்பந்த விண்ணப்பங்கள் அனுப்பும் பொழுது உரையின் மீது **"வாழை மரங்களின் மகசூல் குத்தகை"** என்று தெளிவாக குறிப்பிடுதல் அவசியம்.

4. 05.06.2020 அன்று மாலை 3.00 மணியளவில் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தங்கள் பிரிக்கப்பட்டு உயர்ந்தபட்ச தொகையை கோரி இருப்பவர்க்கு டெண்டர் கமிட்டி ஒப்புதல் அளித்தால் ஏலம் விடப்படும். அந்தத்தொகை குறைவாக இருப்பதாக கமிட்டி கருதும்பட்சத்தில் ஒப்பந்ததாரர்களில் யார் அதிகமாக தொகை கோரி இருக்கின்றார்களோ அதிலிருந்து பகிரங்க ஏலம் விடப்படும். காப்புத்தொகையுடன் ஒப்பந்த விண்ணப்பங்கள் அளித்தவர் மட்டுமே ஏலத்தில் பங்கு பெறமுடியும்.

5. ஏலம் எடுக்கும் பொழுது கூடிப்பேசுவதையோ அல்லது எந்தவிதமான கலந்துரையாடல்களையோ நிர்வாகம் அனுமதிக்காது.

6. ஏலத்தை ஏற்றுக்கொள்வதற்கோ (அல்லது) எந்தவித காரணமும் இல்லாமல் நிராகரிக்கவோ (அல்லது) ஏலத்தேதியை மாற்றி அமைக்கவோ முதல்வருக்கு முழு அதிகாரம் உண்டு.

7. ஏலத்தில் வெற்றிபெற்றவர்கள் ஏலத்தொகை முழுவதையும் ஏலம் எடுத்த 24 மணி நேரத்திற்குள் செலுத்திவிட வேண்டும்.

8. ஏலம் எடுத்தவர் நிர்ணயித்த காலம்வரை மட்டுமே அனுபவிக்க உரிமை உண்டு. பண்ணையில் உள்ள வேறு பயிர்களுக்கு சேதம் விளைவித்தால் அதற்குரிய தொகையை வசூலிப்பதோடு குத்தகையை ரத்து செய்ய முதல்வருக்கு முழுஅதிகாரம் உண்டு.

9. குத்தகை மகசூலில் ஏற்படும் இழப்பிற்கு இப்பண்ணை நிர்வாகம் பொறுப்பேற்காது. ஏலம் எடுத்த மரங்கள் அனைத்திற்கும் காவல் மற்றும் பாதுகாப்பிற்கும், பூச்சி மருந்துகள் அடிப்பதற்கும், ஏலம் எடுத்தவரே தங்கள் சொந்த செலவில் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

10. ஏலம் எடுத்தவர் பண்ணை ஊழியர்களை எக்காரணம் கொண்டும் ஏலம் எடுத்த பகுதியில் அனுமதிக்கவோ, வேலை வாங்கவோ கூடாது. ஏலம் எடுத்த பொருட்களை பண்ணை வளாகத்தில் விற்பனை செய்யக்கூடாது.

11. ஏலம் எடுத்தவருக்கு புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்கப்படும். அதற்கு ரூ.100/- செலுத்த வேண்டும். ஏலம் எடுத்தவர் எவரையேனும் காவல் பணியில் அமர்த்த நேர்ந்தால் அவருக்கும் அடையாள அட்டை அலுவலகத்தில் வாங்கவேண்டும்.

12. ஏலம் எடுத்தவர் அறுவடைசெய்ய ஆட்களை உள்ளே அழைத்துக்கொண்டு வரும் பொழுது மெயின் கேட் வழியாக மட்டுமே அழைத்து வரவேண்டும். மேலும் பண்ணைமேலாளரின் அனுமதி பெற்று வரவேண்டும்.

13. அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில்தான் ஏலம் எடுத்தவற்றை அறுவடை செய்து வெளியே எடுத்துச்செல்ல வேண்டும். விடுமுறை நாட்களில் அறுவடை மற்றும் அறுவடை செய்த பொருட்களை வெளியில் எடுத்து செல்ல அனுமதி கிடையாது.

14. ஏலம் எடுத்தவர் பூச்சி மருந்துகள் அடிப்பதற்கும் மற்றும் உரம் ஏதேனும் இடுவதற்கு முன் பண்ணை மேலாளரிடம் தெரிவித்தல் அவசியம்.

15. ஏலம் எடுத்தவர் வாழையின் பக்கக்கன்றுகளுக்கு சேதம் ஏற்படுத்தாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

16. மேற்குப் பண்ணையின் `O' பகுதியில் உள்ள 1344 வாழைமரங்களுக்கு மட்டும் இந்த ஏலம் பொருந்தும்.

17. வாழைத்தோப்பு ஏலம் எடுக்கும் பொழுது இருந்ததைப்போல தூய்மையாக நிர்வாகத்திடம் ஒப்படைக்க வேண்டும்.

இவண்

**திட்ட ஒருங்கிணைப்பாளர்**
பெருந்தலைவர் காமராசர்
வேளாண் அறிவியல் நிலையம்
புதுச்சேரி